# ★ டி. பியினுல் அரசாங்க நிதி துஷ்பிரயோகம்; வருடம் 800கோடி டொலர் நஷ்டம்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டுக்கு வருடம் ஒன்றுக்கு 800 கோடி டொலர் இழப்பை ஏற்படுத்தும் விதத்தில் முன்னுள் நிதியமைச்சர் டி, பி. விஜேதுங்கா அரசாங்க நிதியைத் துஷ்பிரயோகம் செய்திருப்பதாக நீதி விவகார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த நிதி துஷ்பிரயோகம் தொடர்பான அதிவிசேஷ வர்த்தமானி அறிவித்தல்கள் மூன்று நேற்று நாடாளுமன்றத்தில் அமைச்சர் பீரிஸினுல் சமர்ப்பிக்கப்பட்டன.

(2ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 86 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 1 இதழ் 315
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 16-12-1994

## கல்வித்துறைக்கு ரூ. 93 கோடி உதவி

(கொழும்பு)

கல்வித்துறையில் அடுத்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்கு உதவவென சுவிடிஷ் அரசாங்கம் 93கோடி 60 லட்சம் ரூபாவை வழங்கவிருக்கிறது.

இலங்கையின் கல்வித்துறை அபிவித்ருதிக்கென சுவிடிஷ் அரசு வழங்கும் மூன்ருவது நிதிஉதவி இதுவாகும.

கே-ரி-இ

# ஜனவரி 1-ம் திகதியுடன் போர் நிறுத்தம்

# தைப்பொங்கலுக்கு பின்னரே

# அரசு - புலிகள் பேச்சு ஆரம்பம்!

## லூரசியன் ராஜகருணநாயக்க தகவல்!!

[கொழும்பு]

எதிர்வரும் புதுவருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து போர் நிறுத்தம் அமுலுக்கு வரும். அதனையடுத்து அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இரண்டாவது கட்ட சமாதானப் பேச்சுவார்த்தை தைப்பொங்கலுக்குப் பின் அல்லது பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயத்துக்குப் பின்னரே இடம்பெறும்.

[4ம் பக்கம் பார்க்க]

## கடற்படையினர் மீனவர் மீது தாக்கு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக் கடற்பரப்பில் நேற்று மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களைக் கடற்படையினர் மிகமோசமாகத் தாக்கியதுடன் அவர்களின் மீன்பிடி உபகரணங்களையும் பறிமுதல் செய்துள்ளனர்.

நேற்றுக் காலை 6-45 மணியளவில் மேற்படி கடற்பரப்பிற்குள் திடீரெனபிரவேசித்த கடற்படையினர் அங்கு மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை மிகமோசமாகத் தாக்கினர்.

பின்பு அவர்களின் மீன்பிடி

[4ம் பக்கம் பார்க்க[

## கிளாலி - பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## நீர்கொழும்பில் விமானப்படை பொதுமக்களுடன் மோதல்

### ஒருவர் பலி; மூவர் படுகாயம்

(கொழும்பு)

நீர்கொழும்பில் விமானப் படையினருக்கும் பொதுமக்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் பொதுமகன் ஒருவர் பலியானதுடன் மூவர் படுகாயமடைந்தனர்.

கடந்த திங்கட்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றதாக போலிஸார் 'தெரிவித்தனர், வாகனத்தில் வந்த விமானப்

(4ம் பக்கம் பார்க்க)

## சிறைகள் நிறைந்து வழிந்தன - கருணநிதி

(சென்னை)

"அ. தி. மு. க. அரசின் அடக்குமுறை ஆட்சியை எதிர்த்து இன்று நாம் நடாத்திய மறியல் போராட்டத்தில் கைதுசெய்யப்பட்டவர்களினுல் தமிழ்நாடு, சிறைச்சாலைகள் அனைத்தும் நிரம்பி வழிந்துள்ளன.

நூற்றுக்கணக்கான தோழர்கள் சிறைச்சாலைக்கு வெளியே வாகனங்களிலும் பொலிஸ் வண்டிகளிலும் அமரவைக்கப்

(3-ம் பக்கம் பார்க்க)

★ தமிழக அரசுக்கு எதிராக

## பெரும் மறியல் போராட்டம்

## ஐயாயிரம் பேர்வரை கைது

(சென்னை)

தமிழ்நாட்டில் அ. அ. தி. மு. க. அரசைக் 'கண்டித்து தி. மு. கவும் அதன் தோழமைக் கட்சிகளும் நேற்று பெரும்மறியலை போராட்டம் நடத்தின. சுமார் ஐயாயிரம் பேர்வரை கைதாகினர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மறியலில் ஈடுபட்ட தி.மு.க., ஜனதாதள், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, எம். ஜி. ஆர். தி.மு.க தொண்டர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சென்னையில் தி. மு. க. பொதுச்செயலர் க. அன்பழகன், துணைப் பொதுச்செயலர் திரு. நாஞ்சில் மனோகரன் உட்பட ஐந்நூறுபேர் கைது செய்யப்பட்டனர்.

மதுரையில் மறியல் செய்வதற்காக ஊர்வலமாகச் சென்றபோது 800க்கும் அதிகமானோர் கைதானுர்கள். கட்சியின் செயவாளர் திரு. ஆர்காடு வீராசாமி, அ. இ.போ. பி. செயலர் திரு. என். வல்லரசு ஜனதாதள் மாநில செயலர் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

தமிழக அரசுக்கு எதிராக கோஷமிட்டதுடன் சுமார் இரண்டு மணித்தியாலம் வரை வீதிகளை மறித்து இவர்கள் மறியல் செய்தனர்.

திருச்சி மாவட்டத்தில்

(4ம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டையில் பொலிஸார் வீடுகள்கடைகளுக்குதீவைப்பு

(திருமலை)

திருகோணமலை புல்மோட்டைப் பகுதியை கடந்த முதலாம் திகதி சுற்றிவளைத்த பொலிசார் ஒன்பது வீடுகளைத் தீயிட்டு கொளுத்தியதுடன் நான்கு கடைகளையும் எரித்து நாசமாக்கியுள்ளனர்]

பொலிசாரின் இத்தகைய நாசகாரச் செயலினுல் சுமார் 30 லட்சம் ரூபா வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிசாரின் சுற்றிவளைப்பின்போது 19 பேர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதாகவும் பின்னர் அவர்களுள் எட்டுப் பேர் வரையில் விடுவிக்கப்பட்டதாகவும் பொலிசார் தரப்பில் தெரிவிக்கப்

(4ம் பக்கம் பார்க்க)

### வரி விளம்பரம்

**ஆனந்தா பஞ்சாங்கக் கலண்டர்**

நாள், திதி, யோகம், நட்சத்திரம், கோயில் தினங்கள், விடுமுறை நாட்கள் முதலிய பல விபரங்களும் அடங்கிய மிகச் சிறந்த கலண்டர் மலிவு விலை ரூபா 30/- மட்டுமே.

(ஏ 4581)


டி, பியினுல்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

1991/92/93-ம் ஆண்டு காலப்பகுதியில் முன்னாள் நிதி அமைச்சர் டி. பி. விஜேதுங்கவினுல் சுங்க இறைவரிச் சட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட இறக்குமதி வரியை நீக்கியது தொடர்பாவே மேற்படி மூன்று அதி விசேஷ வர்த்தமானிகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த வரியை நீக்கியதினுல் நாட்டுக்கு வருடாந்தம் 500 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இறக்குமதி வர்த்தக வரியை நீக்கியதன் காரணமாக 300 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனுல் நாட்டுக்கு வருடாந்தம் 800 கோடி டொலர்கள் நஷ்டம் ஏற்பட்டதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் இந்தத் தொகை ஆறுசத வீதததுக்கும் மேலாகும்.

இதனுல் வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை அதிகரித்தது.

துண்டுவிழும் தொகையை ஈடுசெய்வதற்காக பொதுமக்களிடமிருந்து கூடுதல்வரி அறவிடப்பட்டது.

இந்த நிதியை உடனடியாக பெற்றுக் கொள்வதற்கு இந்தத் தொகையை மத்திய வங்கியிடமிருந்தும் பெறும் நிலைக்கு அரசு தள்ளப்படடுள்ளது.

இதனுல் பணவீக்கம் அதிகரிக்க அது ஒரு காரணமாகவும் இருந்தது. பணவீக்கம் அதிகரித்ததால் பொருள்களின் விலைகளும் அதிகரித்தன.

இதனுல் பொதுமக்கள் இந்த நஷ்டத்தைத் தாங்கிக் கொள்ளவேண்டிய நிலைக்கு உள்ளானுர்கள். திறைசேரியில் அவசியமின்றி கைவைக்க வேண்டிய நிலைக்கு இது ஒப்பான ஒரு செயலாகவும் இருந்ததென பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார். இ

த. பொ. க. தேர்வு முடிவு

# கோட்ட மட்டங்களில் சிறப்பு பரிசு பெறுவோர்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் கோட்ட ரீதியாக முதல் இரு இடங்களைப் பெற்று தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் சிறப்புப் பரிசையும், கல்வி மேம்பாட்டுப் பேரவையின் சான்றிதழ்களையும் பெறுகின்ற மாணவர் விபரம் வருமாறு:

யாழ்ப்பாணம்:- பிரதீபா குணராசா வேம்படி மகளிர், உருத்திரன் யூட்துஷ்யந்தன் பரியோவான்.

நல்லூர்:- அரசரத்தினம் ஐங்கரன் யாழ். இந்து, பத்மநாதன் சுஜன் யாழ். இந்து

தெல்லிப்பழை:- அனிதா செல்வராசா மகாஜன, கெங்காதரன் இந்திரமோகன் யூனியன்.

சண்டிலிப்பாய்:- சுஜாதா குமாரசாமி பண்டத்தரிப்பு மகளிர், தாரணி குமாரசிங்கம் மானிப்பாய் மகளிர்

வேலணை:- இராமச்சந்திரன் நாதரூபன் வேலணை வைத்திலிங்கம் து. ம. ம. வி, யகப்பிரியா நடேஸ்வரன் புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர்,

ஊர்காவற்றுறை: பரமேஸ்வரன் தவராஜா யாழ்ரான் கல்லூரி, ஸ்ரீவிஜயகௌரி-

(4ம் பக்கம் பார்க்க)


காரைநகர் மணிவாசகர் சபை

## மணிவாசகர் விழா

[40-ஆவது ஆண்டு]

நிகழும் பவ ஆண்டு மார்கழித் திங்கள் 3-ஆம் நாள் (18-12-1994) ஞாயிற்றுக் கிழமை காரைநகர் மணிவாசகர் சபையின் ஆதரவில் சித்தனகேணி சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான மண்டபத்தில் பிற்பகல் 2-00 மணியளவில் விழா நடைபெறும்.

சைவ அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.

### நிகழ்ச்சி நிரல்

**தலைவர்:**
பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை அவர்கள் (மணிவாசகர் சபை உப-தலைவர்)

**திருவாசகத் திருமுறை ஓதல்:**
செல்வி பரமேஸ்வரி கணேசன்

**தலைமையுரை:**

**ஆசியுரை:**
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

**வாழ்த்துரை:**
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

**சொற்பொழிவு:**
''திருப்பெருந்துறையுறை சிவபெருமானே''
திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்கள் (பொறுப்பதிகாரி, வலி-மேற்கு பிரதேசசபை, உப-அலுவலகம், சங்கானை.)

காரைநகர் மணிவாசகர் சபை நடாத்திய சமய பாடப் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு தங்கப் பதக்கமும், முதன்மைச் சித்தியடைந்த 45 மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படும்.

**பரிசில் வழங்கல்:**

**நன்றியுரை:**

செ. தேவதாசன் B. A. Dip-in-Edu. — தலைவர்
து. நாகேந்திரன் — செயலாளர்

காரைநகர் மணிவாசகர் சபை

விளம்பர அன்பளிப்பு :
**அம்பாள் களஞ்சியம்,**
பிரதான வீதி, வழுங்கம்பரை.
சுழிபுரம்.

(சி-1348)



## புதிய வகுப்புக்கள் ஆரம்பம் - 1995

# யப்பான் கராட்டி

அசோசியேசன் சோட்டோகான் இன்ரநஷனல் கிளப்:



யப்பானில் யகாரா றெட்பட்டி (1-st) அவர் மூலம் எடுத்த 6-வது கறுப்புப் பட்டி திரு. க. ராமச்சந்திரன் கையெழுத்திட்ட சர்வதேச சான்றிதழ் ஒவ்வொரு 4 மாதத்திற்கு ஒரு தடவை வழங்கப்படும்.

அவர்கள் இருவரிடமும் பெற்றுக்கொண்ட கறுப்புப் பட்டி திரு. க. கேதீஸ்வரன் அவர்களின் வகுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

வெள்ளைப் பட்டியிலிருந்து கறுப்புப் பட்டி வரை 4 வருடங்கள்.
GRADE (1) — GRADE (2) 3 வருடங்கள்.
ஒவ்வொரு GRADE இலிருந்தும் அடுத்த GRADEக்கு போவதற்கு ஒவ்வொரு வருடங்கள் கூட எடுக்கும்.

கறுப்புப் பட்டி GRADE 1 தொடக்கம் GR. 10 வரை யகாரா கையெழுத்திட்ட சான்றிதழும் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

### தொடர்பகம்

1. திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம்
   மாஸ்டர் திரு. S. தயாபரன்
   சனி - ஞாயிறு காலை 6—8 மணி மாலை 4—6 மணி
   வியாழன் - வெள்ளி மாலை 4—6 மணி
2. அரியாலை கனகரட்ணம் மகாவித்தியாலயம்
   மாஸ்டர் திரு. P. ரகுநாதன்
   செவ்வாய் - புதன் மாலை 4—6 மணி
   சனி - ஞாயிறு காலை 6—8 மணி 8—10 மணி மாலை 4—6 மணி
3; தொழில் நுட்பக் கல்லூரி கொக்குவில்
   மாஸ்டர் திரு. என். கோணேஸ்வரன்
   புதன் - வெள்ளி காலை 6—8 மணி
   மாஸ்டர் திரு எஸ். சாந்தகுமார்
   திங்கள் - செவ்வாய் காலை 6—8 மணி
   கொட்டடி சனசமூக நிலைய மைதானம்
   சனி - ஞாயிறு காலை 6—8 மணி மாலை 4—6 மணி
4. சுன்னுகம் பொது நூலகம் அருகாமையில்
   மான்ஸ் ரேமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயம்
   திரு. N, கமலநாதன் — சனி மாலை 4—6 மணி, ஞாயிறு காலை 6—8 மணி
   திரு. S. சுரேஸ் — திங்கள் - செவ்வாய் மாலை 4—6 மணி
   உரும்பராய் சந்திரோதய வித்தியாலயம்
   காலை 6—8 மணி — மாலை 4—6 மணி
5. நாவற்குழி மகாவித்தியாலயம் திரு. S. தருமராஜா
   புதன் - வியாழன் மாலை 4 6 மணி
   சனி - ஞாயிறு காலை 6—8 மணி மாலை 4—6 மணி
6. திரு. ந. உமாகாந்தன்
   ★ சாந்தை பாடசாலை பண்டத்தரிப்பு
   செவ்வாய் - வியாழன் மாலை 4—6 மணி
   ★ நாகேஸ்வரி வித்தியாலயம், கந்தரோடை, சுன்னுகம்
   புதன் - வெள்ளி மாலை 6-00 — 7-30 மணி

அனைத்து வகுப்புக்களும் திரு. க. கேதீஸ்வரன் முன்னிலையில் நடைபெறும்.

**Acting Chief Examiner**
Mr. K. Ketheeswaran
(Black Belt)
international
Kondavi I Jaffna-

**International Examiner**
Mr. Jagara (Red Belt)
Japan Karate Association
Shotokan Style international
(JAPAN)

**Chief Fxaminer**
Mr. K. Ramachandran
(Black Belt 6-th Dan
chief Instuructor of Karate Shotokan -
& Bodokan style International
Japan for Sri Lanka (velu valai)
United Arabe mirates,
Saudi Arabia.

Registration No: 70702/94.

(சி-4585)

மணிவாக்கு

கானல்நீர் போன்ற இந்த வாழ்க்கை நிலையானதல்ல என்பதை அறிந்து நல்லோருடன் இணங்கி வாழ்ந்து கடமையைச் செய்து மகிழ்ச்சியடைய வேண்டும்.

- கீதா உபதேசம்

# நமது நோக்கு

## நிரந்தரத் தீர்வு

இனப்பிரச்னைக்குத் தமிழ் மக்கள் உறுதியான, நிரந்தரமான, தமது உரிமைகள் பாதுகாக்கப்பட்ட ஒரு சமாதானத் தீர்வையே விரும்புகிறார்கள் எனத் தலைவர் பிரபா 'ரைம்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியிற குறிப்பிட்டுள்ளார்.

அழுகின்ற பிள்ளைக்கு அவ்வப்போது ஏதாவது விளையாட்டுப் பொருட்களைக் காட்டி, அழுகையை நிறுத்திவிடச் சில தாய்மார்கள் முயற்சிப்பதுண்டு.

குழந்தை ஏன் அழுகிறது? பசியா அல்லது ஏதாவது உடற் கோளாறு என்பதனைக் கண்டறிய வேண்டாமா?

விளையாட்டுப்பொருளைக் கண்டு, மருண்டு, சில நிமிடங்கள் அழுகையை நிறுத்தும்; மருட்சி நீங்கியதும் அழுகை தொடரும்.

அரசியலிலும் இந்த நிலைதான். தமிழர்களின் பிரச்னைக்கு நிலையான தீர்வு காணுது, 'இழுத்தடிப்புகள், விளையாட்டுப் பொம்மைகள் போன்ற சில சலுகைகளை அவ்வப்போது காட்டிப் பார்த்திருக்கிறார்கள்.

சில வேளைகளில், சிலர் மருண்டு போய் நின்றதும் உண்மைதான். ஆனால் நிரந்தரமாக மருண்டு நிற்கும் நிலை பலையேறுவிட்டது என்பதனையே தலைவரின் பேட்டி தெளிவாக்குகின்றது.

தமிழர்கள் அரசியலில் உரிமைகளை இழந்த நிலையில், பிறருக்கு அடங்கியிருக்கும் நிலையில், பாதுகாப்பாக அச்சமின்றி வாழும் உரிமையையே இழந்து தவிக்கும் நிலையில் சில சலுகைகளை மாத்திரம் அளித்துவிட்டால், பிரச்னை நிரந்தரமாகத் தீர்ந்துவிடுமா?

நாடு விடுதலை பெற்ற நாள் முதல் அரசியல் யாப்பினைப் பல தடவைகள் மாற்றியும், பல திருத்தங்கள் செய்து பார்த்திருக்கிறார்கள். அப்படிச் செய்த போதெல்லாம் தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதுபற்றி அக்கறை காட்டினார்களா?

''இனப்பிரச்னைக்குத் தீர்வு காணக்கூடியதாகப் புதிதாக வரையப்படும் யாப்பு அமைய வேண்டும். அல்லாவிடில் அதனால் எவ்வித பயனும் இல்லை'' என வாசுதேவ நாணயக்காரா சுட்டிக் காட்டியதை அரசு கவனத்திற்கு எடுக்க வேண்டும்.

அண்மையில் விகார மகாதேவிப் பூங்காவில் நடைபெற்ற சமாதான மாநாட்டின்போது அவர் கூறியதையும் தலைவர் பிரபா கூறியதையும் இணைத்துப் பார்த்துத் தீர்வுக்கான பாதையில் செல்லாவிடில், நாடு இரண்டாகிவிடும்.

தமக்குரிய பகுதிகளில், தமது உரிமைகளை நிலைநாட்டி, தமக்கென யாப்புத் தயாரிக்கும் நிலையை உருவாக்காது, நிரந்தரத் தீர்வுபற்றி அரசு சிந்திக்க வேண்டும்.

# வன்செயல்களினால் உற்பத்தி தொகை ஒன்பது கோடி ரூபாவாக வீழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள உற்பத்திகளின் பெறுமதி 1981-ம் ஆண்டில் 303 மில்லியன் ரூபாவாக இருந்தபோதிலும் நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக இந்த உற்பத்திப் பெறுமதி பெரிதும் வீழ்ச்சி கண்டுள்ளது. 1990-ம் ஆண்டில் இந்த உற்பத்தித் தொகை 9 கோடி ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

புனருத்தாரண அபிவிருத்தித்திட்டங்களை இனங்காணல் சம்பந்தமாக அண்மையில் நடைபெற்ற மகாநாடொன்றில் யாழ். மாவட்டத் திட்டப்பணிப்பாளர் செ. பத்மநாதன் தனது புள்ளி விபரங்களின்படி மேற்கண்டவாறு தெரிவித்தார்,

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் உள்ளீடுகளிலுள்ள பாரிய போக்குவரத்துச் செலவு காரணமாகவும் மற்றும் பலவகையான தடைகள் காரணமாகவும், விவசாயிகளின் உற்பத்திச் செலவை அதிகரித்துள்ளது. இதில் கடுமையாகப பாதிக்கப்பட்ட துறை கடல்வளத் துறையாகும்.

1983-ம் ஆண்டில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உற்பத்திப் பொருட்கள் 104,318 மெற். தொன்னுக இருந்த போதிலும் 1993-ம் ஆணடில் இத்தொகை 10,000 மெற். தொன்னுக பாரிய வீழ்ச்சி கண்டுள்ளது. இந்த வீழ்ச்சியால் இத்தொழிலில் ஈடுபட்டிருந்த 58,582 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இதனால் படுமோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நிரந்தர வருமானம் பெறும் அரச ஊழியர்கள், மற்றும் கூட்டுறவுஊழியர்கள் தவிர்ந்த சுயதொழில்களில் ஈடுபட்டிருந்த மேசன், தச்சுத் தொழிலாளர்கள் மற்றும் வாகனத் தொழிலாளர்கள் தொழிலை இழந்ததினால் அவர்களது வாழ்க்கைநிலை பெரிதும் பாதிக்கப்பட்டதோடு அல்லாமல் தொழிற்பயிற்சியும் தேர்ச்சியும் கொண்ட இவர்களது தொழில் திறமை செயலிழந்து போயுள்ளது: மக்கள் இடம்பெயர்வு, இருப்பிட வசதியின்மை போன்ற காரணிகள் சமூகத்தின் கட்டமைப்பில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி இருப்பதோடு சமூக கட்டுப்பாடுகள் பழக்கவழக்கங்களிலும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு, மின்சாரமின்மை என்பன மாற்று சக்திப் பயன்பாட்டினை ஊக்குவித்தது: இது கிராமப்புறங்களில் அமைந்திருக்கும் சிறு காடுகள், மரங்கள் கண்டல் காடுகளை அழித்து விறகுத் தேவைகளிற்காக விற்பனை செய்யும் ஒரு புதிய தொழிலாளர் குழுவை உருவாக்கியுள்ளது. இதனால் பாரிய சூழல் பாதிப்பினை ஏற்படுத்தி எதிர்காலச் சந்ததியினருடையதும் எமது பிரதேசத்தினதும் வளர்ச்சிக்குத் தடையாக அமைந்துள்ளது.

இதன் அடிப்படையில்நாம் எமது தேவைகளை இனம் கண்டு எமக்குள் அதனை விவாதித்து தெளிவு பெற உரிய இலக்கைத் தீர்மானித்தல் வேண்டும், அது இலகுவான படிமுறையான திட்ட செயற்பாட்டிற்கும் மக்கள் பங்குபற்றுவதற்கும் வழிவகுப்பதோடு நீண்டகாலத்திற்கு நிலைத்து நிற்கும் அபிவிருத்தி புனரமைப்புத் திட்டமாகவும் மாற்றமடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

(162-ரி)

## சிறைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர் அந்தளவிற்கு எமது மறியல் போராட்டம் மகத்தான வெற்றியை அளித்துள்ளது.

இவ்வாறு தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணுநிதி நேற்று பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இதுபற்றி கலைஞர் மேலும் தெரிவிக்கையில், ''எமது தோழமைக் கட்சிகளுடன் இணைந்து இன்று நாம் மறியல் போராட்டம் ஆரம்பிப்பதற்கு இருநாட்களுக்கு முன்பே 30,000 தொண்டர்களை தமிழக அரசுகைதுசெய்து சிறைகளில் அடைத்துவிட்டது.

இன்று தமிழ்நாடு முழுவதும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட எமது தோழர்களை தமிழக பொலிசார் கைதுசெய்துள்ள போதிலும் சிறைச்சாலைகள் முன்கூட்டியே நிறைந்து வழிந்ததினால் இவர்களை பொலிசார் சிறைச்சாலைளின் வாசல்களில் வாகனங்களில் அமர வைத்திருந்தார்கள் என்றார்.

வி-இ

## வெள்ளி விருந்து

# சிவ வழிபாடு உள்ளத்திற்கு இன்பம்

ஊர்திரை வேலை யுலாவும் உயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார்
கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபால்ச்
சரம்அமர்ந்தான்
ஆதிரைநாள் காணுதே
போதியோ பூம்பாவாய்!

என்பது திருஞானசம்பந்த சுவாமிகள் உரைசெய்த திருமயிலாப்பூர் ப பதிகமாலையில் நாலாவது மலர். இரண்டாம் திருமுறை. ஆதிரைநாள் சிறப்பு அமைந்த ஞானத் தமிழ்-

ஆதிரை சிவபிரானுக்குச் சிறப்பு வாய்ந்த நட்சததிரம். ஆண்டு தோறும் மார்கழி மாதத்தில் கூடிய ஆதிரை நாள் திருவாதிரை எனச்சிறப்பாகக் கொண்டாடப்படுவது. ஆருத்திரா தரிசனம் - நடேசரபிடேகம் - மார்கழி நீராடல் திருவெம்பாவை நிறைவு யாவும் ஒருங்கு அமையப் பெற்ற அருள்நாள் மார்கழித் திருஆதிரை.

திருஆதிரைக்குமுன்னதாகப் பத்துத் தினங்கள் வைகறைப் பொழுதில் எழுந்து மேனி நடுங்கத் தண்ணீரில் நீராடிச் சிவபிரானை நினைந்து தங்கள் வேண்டுதலைக் கேட்டுக் கன்னிப் பெண்கள் விரதம் அனுட்டிப்பார்கள்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணுமலையில் எழுந்தருளிய நாட்களில் அச்சிறப்பினைப் பார்த்து மாதர் கூற்றுகத் திருவெம்பாவையைப் பாடியருளினர் என்று கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்தில் பாடுவார்.

''மாதர்கொண் மாதரெல்லர், மார்கழித் திங்க டன்னிலாதிரை முன்னீ ரைந்தேயாகிய தினங்க டம்மின்...'' என்றும் ''அன்னவ ரியல்பு கண்டா ராங்கவர் புகன்றதாக மன்னிய திருவெம்பாவை வாசகம் பேசி...'' என்றும் வரும்,

நீரில் மூழ்குதல் உடலுக்கின்பம். சிவவழிபாடு உள்ளத்திற்கு இன்பம். திருவெம்பாவை பாடக் கேட்டல் செவிக்கின்பம். திருவாதவூரடிகள் புராணபடனம் இம்மை வறுமை இன்பம் தரும்.

- சிவசண்முகவடிவேல்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-12-16**
**வெள்ளி இரவு**

08-01 கலைமஞ்சரி நிகழ்ச்சியில் முதலில் நூல்அறிமுகம். அறிமுகமாவது - ''காலம் எழுதிய வரிகள்''' கவிதைத்தொகுதி. அதனையடுத்து சிறுகதை - ஆ. ரவீந்திரன் எழுதிய ''நான் போகமாட்டேன்'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை- இரா, இராஜேஸ்கண்ணன் எழுதிய ''அம்மா எங்கே'' ஆகியன கலைமஞ்சரியை அலங்கரிக்கும்.

08-25 கணப்பொழுது- சி. கண்ணம்மா எழுதிய ''லெப்ரினன்ட் நக்கீரன்''.

08-30 செய்திகள்,

08-40 அரசியல் அரங்கம் வே. பாலகுமாரன் எழுதிய ''இந்திய அரசியல் முறைமையே கேள்விக்குறியாக்கும் இந்திய வாக்காளன்''

08-50 வாத்திய கானங்கள்.

09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**1994-12-17**
**சனி காலை**

07-02 மாவீர வணக்கம்.

07-15 நீங்கள் கேட்டவை.

07-30 செய்திகள்.

07-35 பத்திரிகைச்செய்திகள்

07-40 நீங்கள் கேட்டவையின் தொடர்ச்சி.

08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# இராசி பலன்

**16 - 12 - 1994**

**வெள்ளிக்கிழமை**

**(தமிழுக்கு மார்கழி 01)**

சதுர்த்தசி வைகறை 6-03 வரை; கார்த்திகை ந. ப. 12 - 23 வரை சித்தயோகம், இராகுகாலம் காலை 10-52 முதல் 12 . 22 வரை சுபவேளை காலை 6-22 முதல் 7-52 வரை

மேஷம்; தனிமைப்படல், வியாக்கியானம் பணமுடை

இடபம்: நற்பெயர், தொழில் சிறப்பு, பிறர் தயவு.

மிதுனம்: குளம்பியமனம், குடும்பவேற்றுமை, அலைச்சல்.

கடகம்: இனசன உதவி, வெளியூர் தகவல், பயணம்.

சிங்கம்: நண்பர் அறிவுரை. கல்வியியல் சிறப்பு, பாராட்டு

கன்னி: வீண்சச்சரவு. அநாகரிக செயல், மனவெறுப்பு

துலாம்: காரிய தடை, அடிமைநிலை, கோபவார்த்தை

விருச்சிகம்: விருந்தினர் வருகை, புதிய முயற்சி, தியானம்.

தனுசு: வெற்றி வாய்ப்பு, தாயன்பு, செல்வந்தர் நட்பு.

மகரம்: வேண்டாத தொல்லை, சுபவிரயம், துன்பம்,

கும்பம்: மனப்போராட்டம் அகங்காரம், குடும்பபிரிவு

மீனம்; புத்திரர் மகிழ்ச்சி, விருந்துபசாரம், இனிய உறவு.

ஜோஸ்யர்

அமரர்

## பேராசிரியர் துரைராஜா

அவர்களின் முழுஅளவிலான உருவப்படம்



யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பொது அறையில் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களின் முழு அளவிலான உருவப்படம் வரைந்து வைப்பதற்கு திறமையான ஓவியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை 30 - 12-1994 க்கு முன் தலைவர், பல்கலைக்கழக ஊழியர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

இவ்வண்ணம்,

பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

அன்பளிப்பு: ச. க, தனேந்திரன்

(ஏ - 4586)

## நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரத்துங்கா நேற்று நள்ளிரவு முதல் நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைத்தார்.

நாடாளுமன்றம் மீண்டும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 6ம் திகதி காலை 9-30 மணிக்கு கூடும் என்றும் அறிவித்துள்ளார். வி-இ

## கல்விக்கழக ஆசிரியர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த கல்விக் கழக ஆசிரியர் அனைவரையும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கோட்டக் கல்விப் பணிமனையில் சந்திக்குமாறு நல்லூர், யாழ்ப்பாணக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். இ

## போட்டிப் பரீட்சை வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தில் கடமை புரியும் சகல ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் போட்டிப் பரீட்சை பொதுஅறிவு, பொதுஉளவுச் சார்பு வகுப்புக்கள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நாளை 17ம் திகதியும் 18ம் திகதியும் நடைபெறும் என சாவகச்சேரி பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். இ

## நீர்கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினருக்கும்பொது மக்களுக்கும் இடையில் முதலில் வாய்ச்சண்டை மூண்டதாகவும், பின்மோதலாக மாறியபோது பொதுமகன் ஒருவர் இறந்ததாகவும் மூவர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும்தெரிவித்தனர். வி-இ

## தமிழக அரசுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1500 பேர் முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்பட்டனர். இங்குள்ள கல்வி அலுவலகத்திற்கு முன்னால் மறியலில் ஈடுபட முயன்ற 1000 பேர் கைது செய்யப்பட்டனர். கரூரில் சட்டப்பேரவை முன்னாள் தலைவர் திரு. தமிழ்குடிமகன் திருச்சியில் முன்னாள் அமைச்சர் திரு. கே. என். நேரு ஆகியோரும் கைதானார்கள்.

நாகர்கோயிலில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் மறியல் செய்ய முயன்ற தி. மு. க. சட்டப் பேரவை உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி உட்பட மாவட்டத்தில் 300பேர் கைது செய்யப்பட்டனர்.

வேலூரில் மறியல் செய்ய முயன்ற தி. மு. க. மாநிலங்களவை உறுப்பினர் திரு. மொகமட் சகி உட்பட 138 பேரை காவல் துறையினர் கைது செய்தனர். இம்மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 1,340 பேர் கைது செய்யப்பட்டனர்.

கோயம்புத்தூரில்350பேரும் புதுக்கோட்டையில் 1000 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். ரி-இ


### 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பூத்தமலராக
தொட்டிலில்
27-11-1949



காய்ந்த மலராக
கட்டிலில்
17-11-1994

அமரர்

### சிவகுரு நவரத்தினம்

(கனகா றேடர்ஸ் உரிமையாளரும் பிரபல பத்திரிகை முகவர், திருநெல்வேலி)

திதி : 16-12-1994

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எங்கள் குலவிளக்கே உங்களை இனி எப்படி காண்பதோ அறியோம், என்றாலும் எம் உயிர் உள்ள வரை தங்கள் நினைவு எமது இதயத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும். உங்கள் அன்பு, பாசம், பண்பு, கடமை, தியாகம், இறைபக்திகளினால் எங்கள் மனதில் ஆழப்பதிந்துவிட்டீர்கள். இதற்கு எமது இறுதி மரியாதை உங்களை எமது கண் கண்ட குலதெய்வமாக பூசிப்பது தான்.

உங்கள் ஆத்மா சாந்தி பெற்று மோட்சம் அடைய இறைவனை நாளாந்தம் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (16-12-94) எமது இல்லத்தில் இடம் பெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

கனகா இல்லம்,
கைதடி கிழக்கு,
கைதடி.

(எ-4588)


## சுவாமி பிரேமானந்த நீதிமன்ற காவலில்

(சென்னை)

புதுக்கோட்டை மாவட்டம் பாத்திமா நகரில் பிரேமானந்தா சுவாமியை இம்மாதம் 29ம் திகதி வரை நீதிமன்ற காவலில் வைக்குமாறு குற்றவியல் முதன்மை நீதிபதிமுரளி மனோகரன் உத்தரவிட்டிருக்கிறார்.

பிரேமானந்தா சுவாமி சிறையில் வைக்கப்படுள்ள திருச்சி மத்திய சிறைக்கு நேற்று சென்றிருந்த நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்தார். (ரி-இ)

## ஜனவரி 1ம் திகதி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சுதந்திர பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் லூசியன் ராஜகருணாநாயக்க நேற்று பி, பி சி. சிங்களசேவை சந்தேசியவுக்கு வழங்கிய பேட்டியில்இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது]

எமக்கு இப்போது கிடைத்துள்ள தகவல்களின்படி விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்துக்கு விருப்பமாக இருப்பதாக அரசுக்கு கடிதம் ஒன்றின் மூலமாக அறிவிருத்திருப்பதாக தெரியவருகிறது.

எனவே போர் நிறுத்தத்தை எவ்வாறு அமுல் செய்வது என்பது பற்றிய முறைகளையும் விதியையும் பற்றியே இரு பகுதியினரும் இனிமேல் பேச வேண்டும்.

நத்தார் காலப்பகுதியில் போர்நிறுத்தத்தை அமுல் செய்தற்கே அரசு விருப்பமாக உள்ளது. ஆனால் நத்தார் காலத்தில் அது முடியாமல் போனாலும் குறைந்த பட்சம் ஜனவரி முதலாம் திகதி புதுவருடத்துடன் போர்நிறுத்தம் ஒன்றை அமுல்செய்லலாம்.

அதன் பிறகு தைப்பொங்கலையடுத்து அல்லது பரிசுத்த பாப்பரசரின்இலங்கை விஜயத்தையும்யடுத்தே பேச்சுவார்த்தையொன்றைஅரசுஆரம்பிக்கலாம் என்றார். -இ

## த- பொ. க.

(2ம் பக்கத தொடர்ச்சி)

கணபதிப்பிள்ளை ஊர்காவற்றுறை புனித மரியாள்.

மருதங்கேணி:- செல்வரட்ணம் வின்சன் மரியசெல்வம் செம்பியன்பற்று அ. த. க. சுகதா வெற்றிவேல் ஆழியவளை சி. சி. த. க.

பருத்தித்துறை:- இந்திரலிங்கம் தெய்வேந்திரன் ஹாட்லி, சிவராஜா சுதர்சன் ஹாட்லி

சங்கானை:- சிவஞானரட்ணம்-சிவகாந்தன் யாழ்ப்பாணக் கல்லூரி கதிர காமநாதன் ராஜசுதர்ஷன் யாழ்ப்பாணக் கல்லூரி.

கோப்பாய்:- சிவேஸ் சின்னப்பெடியன் அத்தியார் இந்து, தருமலிங்கம் சுதாகர் இடைக்காடு ம வி, அருணாசலம் ாவீந்திரன் இடைக்காடு ம. வி.

உடுவில்:- மிதிலா தர்மபாலன் உடுவில் மகளிர், சிந்துஜா இரத்தினசிங்கம் உடுவில் மகளிர்

சாவகச்சேரி: பிரமிளா சிறிகாந்தன் சாவகச்சேரி இந்து, அருளொளி லோகசுந்தரம் சாவகச்சேரி இந்து.

கரவெட்டி:- அரியநாயகம் தயாபரன் உடுப்பிட்டி அமெரிக்கன் மி.நர்மதா சிவராஜா உடுப்பிட்டி மகளிர்

பளை: இரட்ணகுமார்-மோகனராஜகுமார் பளை ம. வி. சின்னத்துரை பாலேந்திரன் இயக்கச்சி அ. த க.

தமிழ்மொழி பாடத்தில் முதலாமிடத்தைப் பெறுபவர்:- சுதர்சலா மகேந்திரன் யாழ்ப்பாணக் கல்லூரி (91 புள்ளிகள்]

பின்வருவோர் இரண்டாம் இடத்தை பெறுகிறார்கள் உமா இராசேந்திரம், கருணாளினி கந்தையா, சஞ்சிதா தில்லைநாதன். காயத்திரி அசோகன். வேம்படி மகளிர் மகளிர் [90 புள்ளி] நடேசு சுபேந்தன் மானிப்பாய் இந்து [90 புள்ளி] -சி

## பின்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு வரலாற்று நூல் எழுதுவது சம்பந்தமாக நடைபெற இருந்து கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 23ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது வரலாற்று நூல்களை எழுதுவதற்கு ஆலோசனை வழங்கக்கூடிய ஆர்வலர்களையும் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஆசிரியர்களையும் மேற்படி தினத்தில்கலந்துகொண்டு ஒத்துழைப்பு நல்குமாறு சமூகவியல் மன்றத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். இ

## கடற்படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உபகரணங்கள் அனைத்தை பறிமுதல் செய்துவிட்டு துப்பாக்கியால் வானைநோக்கிச் சுட்டபடி அங்கிருந்துசென்று விட்டதாக தாக்குதல்களுக்குள்ளான மீனவர்கள் தெரிவித்தனர். வி- இ

## புல்மோட்டை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது; மேலும் திருமலை இலக்கந்தைப் பகுதியை சுற்றிவளைத்த படையினர் கைதுசெய்யப்பட்ட தமிழர்களை கடுமையாக தாக்கியுள்ளதுடன் தமிழர் ஒருவரின் பெறுமதிவாய்ந்த சொத்துக்களையும் சூறையாடியுள்ளனர் ராம். (க-இ)


★ இதயநாதம் ★ சுவடுகள்
★ எங்கள் தாய்த்திரு நாடு

நூல்களின்

### ஃ வெளியீட்டு விழா ஃ

காலம் : 16 - 12 - 1994 பி. ப. 4 மணி

இடம் : யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு

நிகழ்ச்சி விபரம்

01. தலைமை : திரு. ந. இன்பன் ( பொறுப்பாளர், விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு )
02. மங்கள விளக்கேற்றல் ; செல்வி ம, வாசுகி ( பொறுப்பாளர், மகளிர் பிரிவு மாணவர் அமைப்பு ) திரு. பொன்தியாகம் ( பொறுப்பாளர், மாவீரர் பணிமனை )
03. வரவேற்புரை : திரு. நிலாதமிழின்தாசன் ( வெளியீட்டுப் பிரிவு இணைப்பாளர், வி. பு. மாணவர் அமைப்பு )
04. வெளியீட்டுரை: திரு. புதுவை இரத்தினதுரை ( பொறுப்பாளர், கலை பண்பாட்டுக் கழகம் )
05. வெளியிட்டு வைப்பவர் : திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் ( பொறுப்பாளர், அரசியல் துறை )
06. முதற்பிரதி பெறுவோர் : பேராசிரியர் க. குணரெட்ணம் ( துணைவேந்தர், யாழ். பல்கலைக் கழகம் ) திரு. க. சண்முகநாதபிள்ளை ( செயலாளர், கல்வி மேம்பாட்டுப் பேரவை ) திரு. ஜவான் ( பொறுப்பாளர், நிதர்சனம் )
07. சிறப்புரைகள் : திரு. வெ. இளங்குமரன் ( பொறுப்பாளர், கல்விக்கழகம் ) அருட்திரு பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் ( தலைவர், தமிழீழ கல்வி மேம்பாட்டுப்பேரவை )
08. மதிப்பீட்டுரை : பேராசிரியர் அ. சண்முகதாஸ், ( தலைவர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம் ) இயலிசை வாருதி பிரம்மசிறி வீரமணிஐயர் கலாநிதி சபா ஜெயராசா ( தலைவர், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம் ) அமுதகவிப்புலவர் திரு. ம. விக்ரர் ( ஒய்வுபெற்ற ஆசிரியர் )
09. பதிலுரை : திரு. ந. இன்பன் ( பொறுப்பாளர், விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு ) திரு. எஸ். இசைச்செல்வன் ( கொலின்ஸ் ) ( நூலாசிரியர், இதயநாதம் )
10. நன்றியுரை : திரு. தமிழன்பன் ( துணைப்பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு )

விழாவின் நிறைவாக

ஃ இசைக்குழுவினரின் இசைநிகழ்ச்சியும் ஃ

இடம்பெறும்.

★ தங்களையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு,

(ஏ-4587)


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post OfficeSri uLanka nder Licence Number B/16336/B-